# ADM COURT, SANKARANKOVIL

**தேதி 04.09.2023**

**அசல் வழக்கு எண். 316/2011**

**பி.வா.சா.1 மீண்டும் ஆஜர் சத்தியபிரமாணத்தின் பேரில் வாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

எனது மனைவி பெயர் நாகசெந்தாமரை. வேலுத்தாய் என்பது எனது தாயார். 3,4 மற்றும் 6ம் பிரதிவாதிகளும் நானும் உறவினர்கள் மற்றும் ஒரே சமுதாயத்தை சார்ந்தவர்கள் என்றால் சரியல்ல. 3,6 பிரதிவாதிகளும் நானும் ஒரே ஊரை சார்ந்தவர்கள். 4ம் பிரதிவாதி வெளியூரைச்சார்ந்தவர். சர்வே எண். 426பி என்பது முதன்மை சர்வே எண்ணா அல்லது உட்பிரிவு எண்ணா என்றால் முதன்மை சர்வே எண்தான். சர்வே எண் 426பி ல் பல உட்பிரிவுகள் உள்ளது என்றால்இருக்கலாம். நான் தனராஜிடமிருந்து 10 செண்ட் இடத்தை 2007ம் கிரையம் வாங்கியதாக ஆவணத்தில் பதிவு செய்துள்ளேன் என்றால் ஆமாம். சர்வே எண் 426பி உட்பிரிவு செய்தபோது எனக்கு புதிய சரவே எண் வழங்கப்பட்டதா என்றால் சர்வே எண் 426 பி/8 என புதிய சர்வே எண் வழங்கப்பட்டது. என் பெயரில் உள்ள பட்டா எண் 2296. சர்வே எண். 426பி ல் யாருக்கு எவ்வளவு இடம் பாத்தியப்பட்டது என எப்போது உட்பிரிவு செய்யப்பட்டு பட்டா வழங்கப்பட்டது என்றால் அதைப்பற்றி எனக்கு தெரியாது.பி.வா.சா.ஆ.13 ஆவணத்தின்படி 25.03.2008 ல் தனராஜ்க்கு பாத்தியப்பட்ட 426பி/2பி 2ஏ உள்ள 58 செண்டை வருவாய் துறை உட்பிரிவு செய்தபோது என்பெயரில் சர்வே எண்.426பி/8 என உட்பிரிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் கிரையம் வாங்கிய காலத்திற்கு முன்பிருந்தே தனராஜ்க்கு

பாத்தியப்பட்ட 58 செண்ட் இடம் சர்வே எண். 426 பி/2 பி2 ஏ ல் இருந்து வந்துள்ளது என்றால் சரிதான்.

2) நான் தனராஜிடமிருந்து கிரையம் பெற்ற பி.வா.சா.ஆ 11 ஆவணத்தில் சர்வே எண். 426 பி/2 பி2 ஏ ல் 58 செண்டில் 10 செண்ட் என குறிப்பிட்டு வாங்கியுள்ளேனா என்றால் அதைப்பற்றி எனக்கு தெரியவில்லை. நான் கிரையம் பெற்ற பி.வா.சா-ஆ-11 ஆவணத்தில் சர்வே எண். 426 பி/2 பி2 ஏ என குறிப்பிடாததால் 25.3.2008 ல் வருவாய் துறையினர் சர்வே எண். 426 பி/2 பி2 ஏ வில் உள்ள 58 செண்டை உட்பிரிவு செய்து 10 செண்டிற்கு என் பெயரில் பட்டா வழங்கியது தவறு என்றால் சரியல்ல. மீதமுள்ள சொத்துக்களுக்கு மீண்டும் சர்வே எண். 426 பி/2 பி2 ஏ வில் 17 ஏர்ஸ்க்கு, சர்வே எண். 426 பி/9 ல் 2.5 ஏர்ஸ்க்கு தனராஜ் பெயருக்கு பட்டா வழங்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். தனராஜ் பெயரில் உட்பிரிவுசெய்யப்பட்டுள்ள சர்வே எண். 426 பி/2 பி2 ஏ மற்றும் சர்வே எண். 426 பி/8 ல் உள்ள 48 செண்ட் தான் இந்த வழக்கில் 2,3 அயிட்ட சொத்துக்கள் என்றால் சரிதான். தாவா 2,3 அயிட்டட சொத்துக்களை நான் 1,2 பிரதிவாதிகளிடமிருந்து 29.10.2010 தேதியிட்ட பதிவு கிரைய ஆவணம் மூலம் கிரையம் வாங்கினேன் என்றால் அதைப்பற்றி எனக்கு தெரியாது. நாங்கள் கிரையம் வாங்கிய பிறகுதான் நீங்கள் (வாதி) தவறுதலாக கிரையம் பெற்றுள்ளேர்கள்.

3) தனராஜ் பெயரில் சர்வே எண். 426 பி/2 பி2 ஏ ல் 58 செண்டிற்கு 02.07.2004 லிருந்து பட்டா வழங்கப்பட்டது என்றால் சரிதான். பி.வா.சா.ஆ 13 ஆவணத்தினப்படி தனராஜ் பெயரில் சர்வே எண். 426 பி/2 பி2 ஏ எனவும் ஜமுனாராணி பெயரில் சர்வே எண். 426 பி/2 பி 2 பி, பாப்பம்மாள் பெயரில் சர்வே எண். 426 பி/2 பி1 பி என புதிய சர்வே எண்கள் 02.07.2004 ல் இருந்து வருகிறது என்றால் ஆவணத்தில்

அவ்வாறு இருக்கிறது அதைப்பற்றி நேரடியாக எனக்கு தெரியாது. என்னுடைய முதன்மை வாக்குமூலத்தில் 4 ம் பிரதிவாதி சரஸ்வதி தனராஜிடமிருந்து 10 செண்ட் கிரையம் வாங்கியுள்ளேன் என்றால் சரிதான். 4 ம் பிரதிவாதி தனராஜிடமிருந்து எந்த சர்வே எண்ணில் கிரையம் வாங்கினார் என்றால் அதைப்பற்றி எனக்கு தெரியாது. 4 ம் பிரதிவாதி தனராஜிடமிருந்து சர்வே எண். 426 பி/2 பி2 ஏ ல் உள்ள 58 செண்ட் கிழ்கடைசி 10 செண்டை கிரையம் வாங்கியுள்ளார் என்றால் எனக்கு தெரியாது. 4 ம் பிரதிவாதி கிரையம் வாங்கிய பிறகுதான் நான் கிரையம் பெற்றுள்ளேன் என்றால் சரிதான். 4 ம் பிரதிவாதி கிரையம் வாங்கிய சர்வே எண்ணை குறிபபிட்டு நான் தனராஜிடமிருந்து கிரையம் வாங்கியுள்ளேனா என்றால் 4 ம் பிரதிவாதி கிரையம் பெற்ற சர்வே எண் தெரியாது நான் தனராஜ் சொத்தை கிரையம் வாங்கியுள்ளேன். 4 ம் பிரதிாவதி தனராஜிடமிருந்து 426 பி/2 பி2 ஏ ல் கீழ்கடைசி 10 செண்ட் கிரையம் வாங்கியுள்ள நிலையில் அவருக்க பிறகு தனராஜிடமிருந்து கிரையம் பெற்ற நான் அதே சர்வே எண்ணில் மேற்சொன்ன கீழ்கடைசி 10 செண்ட்போக மேற்குபுறமுள்ள மீதி இடத்தில் கிரையம் வாங்கியிருக்க வேண்டும் என்றால் அதைப்பற்றி எனக்கு தெரியாது. தனராஜ் சொத்தை நான் அவரிடமிருநது கிரையம் வாங்கியுள்ளேன். நான் சரியான சர்வே எண்ணை குறிப்பிட்டு கிரையம் வாங்காததால் என்னுடைய கிரையம் செல்லாது என்றால் சரியல்ல.

4) என்னுடைய கிரைய ஆவணத்தில் குறிப்பிட்டுள்ள 426/பி6 என்ற சர்வே எண் வா.சா-.ஆ 9 ஆவணத்துடன் இணைக்கப்பட்டுள்ள அ பதிவேட்டில் உள்ளதா என்றால் அதைப்பற்றி எனக்கு தெரியாது. 02.07.2004 அன்று உட்பிரிவுசெய்யப்பட்ட போது பாக பத்திரத்தின் படி தனராஜ்க்கு கிடைத்த சொத்திற்கும், சுப்பையா நாயக்கர்

கிரைய கிடைத்த சொத்திற்கும், சரியான அளவுகளுக்கு பட்டா வழங்கப்படாமல் தவறுதலாக வெவ்வேறு விதமான அளவுகளை கொண்ட சொத்திற்கு உடபிரிவு செய்யப்பட்டு புதிய சர்வே எண்கள் 426 பி/2 பி2 ஏ, 426 பி/2 பி1 பி மற்றும் 426 பி/2 பி2 பி , 426 பி/2 பி1 ஏ என உட்பிரிவு செய்யப்பட்டுவிட்டது என்றால் சரியல்ல.02.07.2004 ல் ஏற்பட்ட உட்பிரிவின் போது தனராஜ்க்கு பாகபத்திரப்படி கிடைத்த 62 செண்டில் 23 செண்ட் புதிய சர்வே எண் 426 பி/2 பி1 ஏ ல் சேர்த்து பாப்பம்மாள் பெயரிலும், பாப்பம்மாளுக்கு பாத்தியப்பட்ட 94 செண்டில் 23 செண்டை புதிய சர்வே எண். 426 பி/2 பி2 ஏ வில் சேர்த்து தனராஜ் பெயரிலும் 434 பட்டா வழங்கப்பட்டுவிட்டது என்றால் அதைப்பற்றி எனக்கு தெரியாது. எனக்கு மேற்சொன்ன உட்பிரிவு விபரங்கள் தெரியாமல்தான் என்னுடைய கிரைய ஆவணத்தில் வருவாய் ஆவணத்திலிருந்து நீக்கப்பட்ட சர்வே எண்ணான 426 பி/6 என குறிப்பிட்டு தனராஜ்க்கு பாத்தியபடாத 62 செண்டை பாத்தியப்பட்டது போல் காண்பித்து கிரையம் வாங்கியுள்ளேன் என்றால் சரியல்ல. நான் கிரையம் பெறும்போது சர்வே எண் 426 பி/2 பி2 ஏ என குறிப்பிட்டு கிரையம் பெறவில்லையென்றால் அதைப்பற்றி எனக்கு தெரியாது. தனராஜிடமிருந்து 10 செண்ட் கிரையம் வாங்கியுள்ளேன். என்னுடைய கிரைய ஆவணத்தில் காண்பிக்கப்பட்டுள்ள சர்வே எண்கள் எந்த ஆண்டு வரை வருவாய் ஆவணத்தில் இருந்து வந்தது என்றால் அதைப்பற்றி எனக்கு தெரியாது. 1995 ம் ஆண்டிலிருந்து பழைய சர்வே எண்., 426 பி/6 என்பது வருவாய் ஆவணத்தில் இருந்து வரவில்லை என்றாலும் அந்த சர்வே எண். 426 பி/6 ஏ, 6 பி, மற்றும் 6 சி உட்பிரிவு செய்யப்பட்டுள்ளது என்றாலும் எனக்க தெரியாது. அதேபோல் சர்வே எண். 426 பி/2 பி என்பது 426 பி/2 பி1, 2 பி2 மற்றும் 2 பி3 என உட்பிரிவு செய்யப்பட்டுவிட்டது

என்றால் எனக்கு தெரியாது. மேலும் சர்வே எண் 426 பி/5 பி என்பது 426 பி/5 பி1 மற்றும் 5 பி2 என உட்பிரிவு செய்யப்பட்டுவிட்டது என்றால் எனக்கு தெரியாது.

5) 1995 ம் ஆண்டிலிருந்து மேற்சொன்ன புதிய சர்வே எண்கள்தான் நடைமுறையில்வருவாய் ஆவணங்களில் இருந்து வந்ததது என்றால் எனக்கு தெரியாது. அதன்பிறகு 02.07.2004 ல் மேற்சொன்ன புதிய சர்வே எண்கள் ஒன்றுசேர்க்கப்பட்டு மீண்டும் புதிய சர்வே எண் 426 பி/2 பி2 ஏ, 2 பி1 ஏ, 2 பி2 பி மற்றும் 2 பி1 பி வழங்கப்பட்டது என்றால் எனக்கு தெரியாது. புதிய சர்வே எண் 426 பி/2 பி 2 ஏ என்பது பழைய சர்வே எண்கள் 426 பி/6 ஏ, 2 பி2 மற்றும் 5 பி2 சேர்ந்து என்றால் எனக்கு தெரியாது. மேற்சொன்ன சர்வே எண்கள் 426 பி/6 ஏவில் 2.5 செண்ட், 426 பி/2 பி2 ல் 5 செண்ட் மற்றும் 426 பி/5 பி2 ல் 54 செண்ட் சேர்ந்தது தான் 62 செண்ட் புதிய சர்வே எண் 426 பி/2 பி2 ஏல்வழங்கப்பட்டது. அதேபோல் 6 ம் பிரதிவாதியின் தந்தை சுப்பாநாயக்கரின் பேரில் புதிய சரவே எண்.426 பி/2 பி1 பி என்பது 426 பி/6 பில் 79 செண்ட்டும், 426 பி/2 பி1 மற்றும் 2 பி3 சேர்த்து 10 செண்ட், 426 பி/5 பி1 ல் 8 1/2 செண்ட் சேர்த்து ஆகமொத்தம் 97 1/2 செண்ட் என்றால் அதைப்பற்றி எனக்கு தெரியாது. நான் கிரையம் வாங்குவதற்கு வருவாய் ஆவணங்களை சரிபார்த்தேனா என்றால் சரிபார்த்தேன். நான் கிரையம் பெற்ற சொத்திற்கு வில்லங்க சான்றை சரிபார்த்துதான் கிரையம் வாங்கினேனா என்றால் சரிபார்த்து தான் கிரையம் வாங்கினேன். நான் கிரையம் வாங்கிய போது வருவாய் ஆவணங்களிலிருந்து நீக்கப்பட்ட சர்வே எண்ணை குறிப்பிட்டு கிரையம் வாங்கியுள்ளேன் என்றால் சரியல்ல. சார்பதிவாளர் ஆவணத்தை முறையாக பரிசீலனை செய்யாமல் தவறாக எங்கள் கிரைய ஆவணத்தை பதிவு செய்துள்ளார்

என்றால் சரியல்ல. என்னுடைய கிரைய ஆவணத்தில் மொத்தம் உள்ள 62 செண்டில் கீழ்பக்கம் செண்டில் நீக்கி என சொல்லப்பட்டுள்ள 12 1/2 செண்ட் யாருக்கு பாத்தியப்பட்டது என்றால் தனராஜ்க்கு பாத்தியப்பட்டது. மேற்சொனன் 12 1/2 செண்ட் என்பது தனராஜ் 4ம் பிரதிவாதிக்கு விற்பனை செய்த 10 செண்ட்டும் ஜமுனாராணிக்கு பாத்தியப்பட்ட 2 1/2 செண்ட்டும் சேர்த்துதான் 12 1/2 செண்ட் என்றால சரியல்ல.

6) என்னுடைய கிரைய ஆவணத்தில் நான் கிரையம் பெற்றுள்ள சொத்திற்கு கிழக்குபுறமாலாக யாருடைய இடம் காண்பித்துள்ளேன் என்றால் நாராயணசாமி நாயக்கர் வகையறா நிலம் என காண்பித்துள்ளேன். மேற்சொன்ன நாராயணசாமி நாயக்கர் வகையறா என்பது ஜமுனாராணியை குறிக்கும் என்றால் அவர்கள் இருவரும் உறவினர்கள் என்ன உறவு என்று தெரியாது. என்னுடைய கிரைய பத்திரத்தில் கிழக்கு மாலாக சரஸ்வதி நிலம் என காண்பித்திருக்க வேண்டும் என்றாலும் நான் பொய்யாக நாராயணசாமி இடம் என காண்பித்துள்ளேன் என்றால் சரியல்ல. என்னுடைய கிரைய பத்திரத்தில் கிழக்கு புறமாலாக சரஸ்வதி இடம் என காண்பிக்கவில்லை. நான் கிரையம் பெற்ற இடத்திற்கு கிழக்குபுறமாலாக சரஸ்வதியின் இடம் என காண்பித்தால் வருவாய் ஆவணத்தில் இல்லாத சர்வே எண்ணை காண்பித்தது ஆவணத்தின் உண்மை நிலமை தெரியும் என்பதால் ஆவணத்தில் குறிப்பிடவில்லை. நான் கிரையம் பெற்ற சொத்திற்கு பட்டா மாற்றம் செய்ய மனுகொடுத்தேனா என்றால் மனுகொடுத்தேன். நான் என் பெயரில் பட்டா மாற்றம் செய்யும்போது தனராஜ் பெயரில் இருநத் 434 பட்டாவை தாக்கல்செய்யாமல் போலியான ஆவணங்களை கொடுத்து பட்டா வாங்கியுள்ளேன் என்றால் சரியல்ல.

அதேபோல் சர்வே எண். 426 பி/2 பி2 ஏ விற்கான வில்லங்க சான்றை தாக்கல் செய்யாமல் போலியான ஆவணத்தின் அடிப்படையில் பட்டா பெற்றுள்ளேன் என்றால் சரியல்ல. சரஸ்வதி கிரையம் பெற்ற சொத்திற்கு இன்றுவரை தன் பெயரில் பட்டா வாங்கவில்லை என்றால் அதைப்பற்றி தெரியாது. பி.வா.சாஆ 13 ஆவணத்தில் சரஸ்வதி பெயரில் எந்த பட்டாவும் வழங்கவில்லை என்றால் சரிதான். நானும் 3 மற்றும் 6 ம் பிரதிவாதியும் சேர்ந்த சரஸ்வதி பெயரில் பட்டா வழங்கவிடாமல் தடுத்துவிடடோம் என்றால் சரியல்ல. சரஸ்வதி பெயரில் பட்டா வழங்கப்பட்டுவிட்டால் நாங்கள் பெற்ற கிரையம் செல்லாமல் போய்விடும் என்பதால் சரஸ்வதி பெயரில் பட்டா வழங்கவிடாமல் தடுத்துவிட்டோம் என்றால் சரியல்ல. என்னிடம் காட்டப்படும் ஆவணம் நான் என்தாயார் வேலுத்தாய்க்கு எழுதிக்கொடுத்த நன்கொடை பத்திரத்தின் பதிவு நகல் என்றால் சரிதான் .அது வா.சா.ஆ.10 ஆககுறியீடு செய்யப்படுகிறது. வா.சா.ஆ 10 ஆவணத்தில் சர்வே எண் 426 பி/8 ல் 10 செண்டில் தென்பக்கம் 3 செண்டை நன்கொடை கொடுத்துள்ளேன் என்றால் சரிதான். வா.சா.ஆ.10 ஆவணத்தில் அவ்வாறு சர்வே எண். 426 பி/8 ல் தென்பக்கம் 3 செண்ட் என குறிப்பிட்டு நன்கொடை கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. என் தாயாருக்கு நான் எழுதிக்கொடுத்த நன்கொடை ஆவணத்தில் புதிய சர்வே எண். 426 பி/8 யை குறிப்பிடாமல் பொய்யான சர்வே எண்ணை குறிப்பிட்டு ஆவணத்தை பதிவு செய்துள்ளேன் என்றால் சரியல்ல. வருவாய் துறையினால் என் பெயரில் வாங்கப்பட்ட புதிய சர்வே எண் 426 பி/8 யை நான் ஏற்றுக்கொள்ளாததால் வா.சா.ஆ.10 ஆவணத்தை நான் குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல. சரஸ்வதி கிரையம் பெற்ற 10 செண்ட் உண்மை என்பதால்தான் நான் வா.சா.ஆ-10 ல் சர்வே

எண். 426 பி/8 யை குறிப்பிடவில்லையென்றால் சரிதான். வா.சா.ஆ-10 பதிவு செய்தபோது என் பெயரில் வழங்கப்பட்ட 2296 பட்டாவை சார்பதிவாளர் முன்னிலையில் தாக்கல் செய்தேன் என்றால் தாக்கல் செய்தேன்.

7) அதேபோல் சர்வே எண்.426 பி/8 க்கான வில்லங்க சான்றை சார்பதிவாளரிடம் தாக்கல் செய்தேனா என்றால் தாக்கல் செய்தேன். வா.சா.ஆ-3 ல் வில்லங்க சான்று வா.சா.ஆ-10 பற்றி பதிவு இ,ல்லையென்றால் அந்த் சர்வே எண் ஆவணத்தில் குறிப்பிடபடாததால் பதிவு இல்லை. என் தாயார் பெயரில் எழுதிக்கொடுத்த 3 செண்டிற்கு எனது தாயார் பெயரில் பட்டா உள்ளதா என்றால் இல்லை.என் தாயார் பெயரில் நன்கொடை எழுதிக்கொடுத்து 10 வருடம் ஆகியுள்ள நிலையில் இன்று வரை பட்டா வாங்கவில்லை என்றால் நான் வெளியூரில் வேலை செய்துவருவதால் நேரம் இல்லாத காரணத்தால் என்னால் பட்டா வாங்க முடியவில்லை. 02.07.2004 க்குபிறகு வருவாய் ஆவணத்தின் படி தனராஜ்க்குபாத்தியப்பட்ட சர்வே எண். 426 பி/2 பி2 ஏ வில் மொத்தம் உள்ள 58 செண்டில் சரஸ்வதி பெயரில் கிரையம் பெற்ற 10 செண்ட்டும் நான் 29.10.2010 ல் தனராஜிடமிருந்து கிரையம் பெற்ற இவ்வழக்கில் 2,3 அயிட்ட சொத்துக்கள் தான் செல்லத்தக்கது என்றாலும் அதன் பிறகு வருவாய் ஆவணத்தில் இல்லாத சர்வே எண்ணை குறிப்பிட்டு நானும் 3 மற்றும் 6 பிரதிவாதிகளும் பெற்ற கிரையம் செல்லாது என்றாலும் சரியல்ல. எனவே வாதிகோரியபடி வழக்கு தீர்ப்பாக வேண்டும் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை**